ISSN:2583-2379
المجلد الثالث - العدد الثاني مجلة البخاري للعربية والدراسات الإسلامية يوليو –ديسمبر ٢٠٢٣

# தமிழகத்தின் முதல் மத்ரஸா

# FIRST MADRASAH OF TAMIL NADU: A STUDY

**முனைவர் க.மு.அ. அஹ்மது ஜுபைர்**
இணைப் பேராசிரியர்,
முதுகலை மற்றும் அரபி ஆய்வியல் துறை,
புதுக் கல்லூரி, 87, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014. இந்தியா.

**Dr. K.M.A. Ahamed Zubair**
Associate Professor of Arabic,
Post Graduate and Research Department of Arabic,
The New College, 87, Peters Road, Chennai - 600 014, India.
Email: arabic.zubair@gmail.com,ahamedzubair@thenewcollege.edu.in

**Abstract:**

Madrasah Darul Uloom and al-Jamiah al-Aroosia al-Arabiyya are the early Islamic institutions established in Tamil Nadu in the seventeenth century. Al-Jamiah al-Aroosia has been functioning since its inception with the scope of disseminating the Islamic light to the Ummah without any intercession. This article shed light on this pioneer institution as a trendsetter of Islamic education on par with other institutions established during this period.

**Keywords:** Al-Jamiah al-Aroosia, Al-Arabiyya, Arabic, Islamic Education, Tamil Nadu, Madrasah.

**மத்ரஸா: ஒரு விளக்கம்**

த-ர-ஸ என்ற வினைச்சொல்லில் இருந்து அரபி மொழியில் “தர்ஸ்” என்ற சொல் தோன்றுகிறது. தர்ஸ் என்றால் பாடம் என்றும், “திராஸா” என்றால் படிப்பு என்றும், “தத்ரீஸ்” என்றால் பயிற்றுவித்தல் என்றும், “மத்ரஸா” என்றால் பயிற்றுவிக்கப்படும் இடம் அல்லது பாடசாலை என்றும் அரபியில் பொருள், ஆக மத்ரஸா என்றால் கல்வி நிறுவனம், பள்ளி என பொருள் கொள்ளல் வேண்டும், இஸ்லாமியக் கலைகளான குர்ஆன், அதன் விளக்க உரை மற்றும் தெளிவுரை, ஹதீஸ் எனும் நபிமொழி, ஃபிக்ஹூ எனும் மார்க்க சட்டங்கள் முதலியனவற்றை தெரிந்து கொள்வதற்கும், பிறருக்கு தெரியப்படுத்தவும் ஆசிய கண்டத்தில் இராக், ஈரான், சிரியா, அல்ஜீரியா, லெபனான் உள்ளிட்ட அரபு நாடுகளிலும், இந்தியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பிற நாடுகளிலும் இம்மத்ரஸாக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அன்றைய இஸ்லாமிய ஸ்பெயின் ஆன அந்தலூசியாவிலும் இம்மத்ரஸாக்கள் நிறுவப்பட்டன. இஸ்லாமிய நாகரீகத்தின்

அறிவுத்தொட்டில்களாய் திகழ்ந்த நகரங்களான பஸரா, கூபா, ஷீராஜ், தப்ரேஜ், சமர்கந்த், புகாரா, பக்தாத் நீஷாப்பூர், ஹம்தான், டமாஸ்கஸ், குருதுபா (கார்டோவா), டில்லி, ஜோன்பூர், ஆக்ரா, பாட்னா, ஆற்காடு, காயல்பட்டினம், கீழக்கரை, சென்னை, கோழிக்கோடு முதலியன சிறந்த கல்வி கற்கும் நிலையங்களாகவும், இஸ்லாமியக் கலைகளின் கருவூலங்களாகவும் விளங்கின இம்மத்ரஸாக்கள் மூலம் இஸ்லாமிய கலைகளை மட்டும் கற்றதோடு நின்று விடாது, ஆன்மீக இறைவேண்டலுக்காக தைக்கா ஜாவியா, கான்காஹ் முதலிய தியானப்பள்ளிகளையும் தோற்றுவித்தனர். தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மத்ரஸா எது? என்ற கேள்வியை சரித்திர பார்வையினூடே பதிவுச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழகத்தில் இஸ்லாம்:**

"தமிழகத்தில் இஸ்லாம் கிபி 637 ஆம் ஆண்டு முதலே தென்பட்டது" என்ற சரித்திர உண்மையை நாம் இவ்வேளையில் பதிவு செய்வதும் நமது தமிழகத்தின் கடமையாகும். மேற்கூறிய செய்தி இந்திய வெளியுறவு துறையின் காலாண்டு இதழான "சகாபத்துல் ஹிந்த்" இல் 59ஆவது தொகுப்பில், 2008 ஆம் ஆண்டின் மூன்றாம் இதழில், 163 ஆம் பக்கத்தில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. அதாவது "ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டு முதலே இஸ்லாம் தமிழகத்தில் பரவி இருந்தது" என்ற உண்மை நமக்கு புலப்படுகிறது. "வட இந்தியாவில் முகம்மது பின் காசிம் அல் சகாஃபியின் படையெடுப்பிற்கு ஏறத்தாழ 91 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவின் கிழக்கு கடலோரப் பகுதிகளின் வழியே, இந்தியப் பெருங்கடல், அரபிப் பெருங்கடல் மூலம் தென்னிந்தியாவில் இஸ்லாம் தலைத்தோங்கியது" என்ற வரலாற்று உண்மை அஸ்ஸாம் பல்கலைக்கழகத்தின், இலக்கிய கலாச்சார ஆண்டு இதழான "அல் ஷரூக் அல் ஹிந்த்" இல் 2014ஆம் ஆண்டின், இதழ் எண் இரண்டில், 54 ஆம் பக்கத்தில் நமக்கு காண கிடைக்கின்றது. இப்படி சரித்திர புகழ் பெற்ற தமிழகத்தின் முதல் மத்ரஸா எது? என்பதை நாம் இப்போது அலசுவோம்.

ISSN:2583-2379

المجلد الثالث - العدد الثاني مجلة البخاري للعربية والدراسات الإسلامية يوليو– ديسمبر ٢٠٢٣

**தமிழகத்தில் மத்ரஸாக்கள்:**

தமிழகத்தின் மூத்த மத்ரஸாவாகவும், மத்ரஸாக்களின் தாய் (தாயகம்) ஆகவும் விளங்குவது “பாக்கியாதுஸ் ஸாலிஹாத்” என்ற மத்ரஸா எனவும், அஃலா ஹஜ்ரத் அப்துல் வஹ்ஹாப் வேலூரி அவர்கள் இம்மமத்ரஸாவை ஹிஜ்ரி *1299* ஆம் ஆண்டில் நிறுவியதாகவும் கூறப்படுகிறது. ஹிஜ்ரி *1299* ஆம் ஆண்டு என்பது கிபி *1881/1882* ஆம் ஆண்டைக் குறிக்கும். குல்தீப் கவுர், *1990*ஆம் ஆண்டு எழுதிய தனது நூலான *“Madrasa Education in India: A story of its Past and Present”* (இந்தியாவில் மத்ரஸாக் கல்வி கடந்த கால மற்றும் நிகழ்கால வரலாறு) என்ற நூலில் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் என்ற மத்ரஸா கிபி *1883* ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாக குறிப்பிடுகின்றார். ஆனால் தமிழகத்தின் முதல் மத்ரஸா எது? என்ற வரலாற்று உண்மை மறக்கப்பட்டதா அல்லது மறுக்கப்பட்டதா என்ற கூற்றை இவ்வேளையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.






**தாருல் உலூம் மற்றும் அல்-ஜாமியத்துல் அரூஸிய்யா:**

இஸ்லாத்தின் முதல் கலீபாவான அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்களின், *26*ஆவது தலைமுறையில் தோன்றியவர் மக்தூம் முல்லா அஹ்மது ஹாபீஸ் ஆவார். எமன் தேசத்திலிருந்து மார்க்க பிரச்சாரம் செய்வதற்காக பயணம் மேற்கொண்ட வேளையில், கப்பல் கடலில் உடைந்து மூழ்கியதின் விளைவாக இந்தியக்கரை வந்தடைந்து தமிழகத்தின் எமனேஸ்வரத்தில் வசித்து வந்தவரே இந்த அஹ்மது ஹாபீஸ்.

இச்சந்ததியில் நின்று தோன்றியவரே மக்தூம் சின்னீனா லெப்பை ஆலிம். இவர் அபூபக்கர் சித்திக் (ரலி) இன் 36 ஆவது தலைமுறையில் வந்தவர். இவர் அதிராம்பட்டிணத்தில் தோன்றியவர். இவர் கீழக்கரையில் சீதக்காதியின் முன்னோர்களால் நடத்திவரப்பட்ட "தாருல் உலூம்" எனும் அரபிக் கல்லூரியின் முதல்வராக பணியாற்றியவர். ஆக 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட அரபி மத்ரஸாவே "தாருல் உலூம்" ஆகும். சின்னீனா லெப்பை ஆலிமிடம் கல்விக் கற்ற மாணவர்களில் ஒருவரே சதகத்துல்லா அப்பா (1632-1703) ஆவார்.

**தமிழகத்தின் முதல்** மத்ரஸா:

சின்னீனா லெப்பை தனது 89ஆவது வயதில் (ஹிஜ்ரி 1071/கிபி 1660-61) இறப்பு எய்தினார். இவர் கீழக்கரை பழைய ஜும்மா பள்ளியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். காயல்பட்டிணத்தில் பிறந்து வளர்ந்து பின்னர் கீழக்கரையில் குடியேறிய சதகத்துல்லா அப்பா, கீழக்கரையில் வசித்த வீடு தற்போது "உஸ்வதுல் ஹசனா முஸ்லிம் சங்கம்" எனும் கல்விச்சங்கமாய் இன்றும் விளங்குகின்றது. தனது வீட்டின் அருகில் ஒரு பள்ளி அமைத்து, அதில் சதகத்துல்லா அப்பா கல்வி போதித்து வந்தார். இக்கல்வி நிறுவனம் கிபி 1671 ஆம் ஆண்டு சதகத்துல்லா அப்பாவால் நிறுவப்பட்டு, கீழக்கரை அப்துல் காதர் என்ற தைக்கா சாஹிபால் (1778-1850) 1805 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டும், கீழக்கரை மாப்பிள்ளை லெப்பை ஆலிமால் (1816-1898), 1848 ஆம் ஆண்டு விரிவாக்கமும் செய்யப்பட்டது. இக்கல்விச் சாலையே "அல்-ஜாமியத்துல் அரூஸிய்த்துல் அரபிய்யா" என்ற மத்ரஸா ஆகும். இன்றும் இந்நிறுவனம் கல்வி சாலையாய் சேவையாற்றி வருகின்றது.

சின்னீனா லெப்பையின் தலைமையின் கீழ் சிறப்பாக பணியாற்றி வந்த தாருல் உலூம் கல்வி நிறுவனத்தின் தலைமை பொறுப்பை தனது முதுமையின் காரணத்தால், தன் மாணவர் சதகத்துல்லா அப்பாவிடம் ஒப்படைத்து விட்டு, சின்னீனா ஓய்வு பெற்றார். இந்நிறுவனமே தமிழகத்தின் முதல் மத்ரஸா ஆகும். இம்மத்ரஸாவின் தலைமை ஆசிரியப் பணியை ஏற்கும் வேளையில், சதகத்துல்லா அப்பாவின் அகவை 45 ஆகும். ஆனால் தனது 39 வது வயதிலேயே அப்பா (அதாவது 1671) தற்போதைய "அல்-ஜாமியத்துல் அரூஸிய்த்துல் அரபிய்யா" என்ற மத்ரஸாவை நிறுவினார் என்பதையும்

இவ்வேளையில் கருத்தில் கொள்ளல் வேண்டும். ஆக “தாருல் உலூம்” எனும் மத்ரஸா, “அரூஸிய்யா” மத்ரஸா என, பிற்காலத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்ற கூற்று தவறானது என்பதை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். 17 ஆம் நூற்றாண்டின் நிறுவப்பட்ட “தாருல் உலூம்” மத்ரஸாவோ அல்லது 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட “அரூஸிய்யா” மத்ரஸாவோ தமிழகத்தின் முதல் மத்ரஸாவாக கருதப்பட வேண்டும். இலங்கை, மலேசியா, முஹல்லத்தீவு, மாலத்தீவு, இந்தோனிசியா போன்ற நாடுகளிலிருந்தும் மாணவர்கள் அரூஸிய்யா கல்விச்சாலையில் படித்து பலர் ஆலிம் (அறிஞர்) என்ற ஸனது பெற்றுள்ளார்கள். நிறுவப்பட்ட நாளிலிருந்து இன்று வரை எந்த தொய்வின்றி தனது கல்விப் பணியை நிறைவேற்றி வரும் “அல் ஜாமியத்துல் அரூஸிய்யா அரபிய்யா” என்ற மத்ரஸாவே தமிழகத்தின் முதல் மத்ரஸாவாக சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டும்.







ஆக தமிழகத்தின் தாய் மத்ரஸாவாக இன்றும் தீனொளி வீசிக்கொண்டிருக்கும் அரூஸிய்யா கல்விச்சாலையை முதல் மதராஸாவாக பதிவு செய்து சரித்திர சந்திப்பிலேயே நிலைநிறுத்துவதும் நமது கடமையாகும். எனவே பாக்கியாதுஸ் ஸாலிஹாத் என்னும்

பாடசாலை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிறுவப்பட்ட மத்ரஸாவாகும். 17 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட அரூஸிய்யா மத்ரஸா ஏன் வரலாற்றில் இடம் பெறவில்லை? வரலாற்றின் பக்கங்களில் மறக்கப்பட்டதா அல்லது மறைக்கப்பட்டதா என்ற கேள்வியை அறிஞர் பெருமக்களிடமே முன்பே விட்டுவிடுகின்றேன்.

**நிறைவாக...**

"அரபி இலக்கியத்திற்கு தமிழக மத்ரஸாக்கள் பங்களிப்பு" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட முனைவர் பட்ட ஆய்வேட்டின் வாய்மொழித் தேர்வு, புதுக் கல்லூரியின் புகாரி கலையரங்கில், 19-01-2015 ஆம் தேதி அன்று நடந்தது. அத்தேர்விலே புதுக் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். அப்துல் மாலிக் அவர்கள், ஆய்வாளர் நஹ்வி முஹ்யித்தீனை நோக்கி "தமிழகத்தின் முதல் மத்ரஸா எது"? என்ற வினாவினை அரபியில் வினாவினார். "அரூஸிய்யா" மத்ரஸாவே தமிழகத்தின் முதல் மத்ரஸா என ஆய்வாளர் பதிலளித்தார். இந்த விடை வரலாற்றிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**துணைநூற்பட்டியல்:**


- *Kaur, Kuldip.1990. Madrasa Education in India, A Study of its Past and Present. Chandigarh: Centre for Research in Rural and Industrial Development.*
- *Shuaib, Tayka. 1993. Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu. Madras: Imamul Arus Trust.*
- *Zubair, K.M.A, Ahamed. 2003."Usrathus Shaik Sadaqathullah Appa wa Khidmathuhaa al-deeniyya wal Ilmiyya". PhD diss., University of Madras.*
- *Zubair, K.M.A, Ahamed. 2017. Muslim Tamils: The Historical, Socio-Cultural and Linguistic Perspectives. Saarbrucken: LAP Lambert Academic Publishing.*
- *Zubair, K.M.A, Ahamed. 2017. Islamic Mysticism in Tamil Nadu. Saarbrucken: LAP Lambert Academic Publishing.*
- *Zubair, K.M.A, Ahamed. 2017. Arabic Studies in India. Saarbrucken: LAP Lambert Academic Publishing.*